உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.05.2026 • மலர் 04 • இதழ்: 148 • Edition : Nagercoil • 28.05.2026 • Vol : 04 • Issue : 148 • Page : 4 • Rs. 5/-

### பிரதமர் மோடியுடன் முதல்வர் விஜய் சந்திப்பு

# தமிழக அரசின் கோரிக்கைகள் குறித்து மனு அளிப்பு

புதுடெல்லி, மே. 28

பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் விஜய் சந்தித்துப் பேசினார். அப்போது, தமிழக அரசின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமர் மோடியிடம் முதல்வர் விஜய் அளித்தார்.

தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர், முதன்முறையாக பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்காக சென்னையில் இருந்து இன்று காலை டெல்லி புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு நாள் பயணமாக டெல்லி வந்த அவரை, டெல்லி தமிழ்நாடு இல்லத்தில், தமிழக தலைமைச் செயலர் சாய் குமார் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். இதையடுத்து, காவல் துறை அணிவகுப்பு மரியாதையும் விஜய்க்கு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது வலியுறுத்த வேண்டிய முக்கிய விஷயங்கள் தொடர்பாக முதல்வர் விஜய், உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இதையடுத்து, அவர் பிரதமரைச்சந்திக்கபுறப்பட்டுச் சென்றார்.

பிரதமர் மோடியைச் சந்தித்தமுதல்வர்விஜய், அவருக்கு பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். புதிதாக கட்டப்பட்டுள்ள சேவா தீர்த் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.



தொடர்ந்து இருவரும் தமிழ்நாடு மற்றும் தேசிய விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர். சுமார் 20 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, மேகேதாட்டு அணை, இருமொழி கொள்கை, அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கான பிஎம்ஸ்ரீ திட்ட நிதி,

தமிழகத்துக்கு நிலுவையில் உள்ள மத்திய நிதி, தமிழகத்தின் உள்கட்டமைப்பு வளர்ச்சி மேம்பாடு உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை முதல்வர் விஜய், பிரதமர்மோடியிடம்நேரில்வழங்கினார்.

இந்தச் சந்திப்பு நிறைவடைந்ததை அடுத்து அவர் மீண்டும் தமிழ்நாடு இல்லத்துக்கு திரும்பினார்.

பிரதமர் நரேந்திர மோடி உடனான சந்திப்பை அடுத்து, உள்துறை அமைச்சர் அமித் ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரையும் முதல்வர் விஜய் சந்திக்க உள்ளார்.

மேலும், இந்தப் பயணத்தின்போது காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தியையும் முதல்வர் விஜய் சந்திக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. அதோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பேபி ஆகியோரையும் விஜய் சந்திப்பார் என தகவல் வெளியாகி உள்ளது.

### நாகர்கோவில் மாநகராட்சியில்

## தெரு நாய் பிரச்சனை மற்றும் குடிநீர் பிரச்சனைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்

### மாமன்ற கூட்டத்தில் (பொ) மேயர் மேரி பிரின்ஸி லதா உறுதி

நாகர்கோவில், மே28



நாகர்கோவில் மாநகராட்சியின் மாமன்ற கூட்டம் பொறுப்பு மேயர் மேரிபிரின்சி லதா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலை வகித்தார். மண்டலத் தலைவர்கள் அகஸ்டினா கோகிலாவாணி, ஜவகர் செல்வகுமார், முத்துராமன் மற்றும் கவுன்சிலர்கள் ரமேஷ், உதயகுமார், நவீன்குமார், சேகர், மேரி ஜெனட் விஜிலா, அனுஷா பிரைட் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள விஜய் அவர்களுக்கு நன்றி மற்றும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும், நாகர்கோவில் மாநகராட்சி மேயராகப் பொறுப்பேற்றுள்ள மேரி பிரின்சி லதாவிற்கும் கவுன்சிலர்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து விவாதங்கள் தொடங்கின. அப்போது 3ஆவது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் அருள் சபிதா பேசுகையில், "எனது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் திட்டப் பணிகள் நடைபெறும் போது, அதை நான் ஆய்வுக்குச் சென்றால் ஒப்பந்ததாரர்கள் தரக்குறைவாகப் பேசுகின்றனர். இது குறித்து மாநகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்று கூறி, கூட்ட அரங்கின் மையப்பகுதிக்கு வந்து திடீரென உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். சுமார் 10 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்த இந்தப் போராட்டத்தை அடுத்து, ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கவுன்சிலரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அருள் சபிதா போராட்டத்தைக் கைவிட்டுத் தனது இருக்கைக்குத் திரும்பினார்.

தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் கவுன்சிலர்கள் பேசியதாவது: நாகர்கோவில் நகரில் கடந்த சில நாட்களாகக் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. விபத்தை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என கேள்வி எழுப்பினர். முன்னாள் முதல்வர் ஸ்டாலின் நாகர்கோவில் வருகையின் போது எடுக்கப்பட்ட வேகத் தடைகளை மீண்டும் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தமிழக அரசு தற்போது குளங்களில் உள்ள வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்கி வருகிறது. இதேபோல, நாகர்கோவில் நகர மக்களின் முக்கியக் குடிநீர் ஆதாரமான முக்கடல் அணையில் உள்ள மணலையும் எடுத்து தூர்வார உரிய அனுமதி பெற்றுத் தர வேண்டும். செம்மண்குளத்தைத் தூர்வாரி, எடுக்கப்பட்ட மணல் கரையோரமாகக் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. அந்த மணலை வெளியே கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினர். மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை நீடிக்கிறது. குறிப்பாக 48ஆவது வார்டில் முறையாகத் தண்ணீர் வழங்காததால் பொதுமக்கள் போராட்டம் நடத்தும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 51ஆவது வார்டிலும் குடிநீர் விநியோகம் சீராக இல்லை. அங்கு ஏற்கனவே இருந்த 7 HP மோட்டாரில் பழுது ஏற்பட்டதால், அது மாற்றப்பட்டுள்ளது. இனி தண்ணீர் தடையின்றி வழங்கப்பட வேண்டும். பழுதடைந்த போர்வெல்களைச் சுத்தம் செய்ய வேண்டும், தேவையான இடங்களில் புதிய போர்வெல்களை அமைக்க வேண்டும்.

மாநகரில் நாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நாய்களுக்குக் கருத்தடை செய்வதாக அதிகாரிகள் கூறுகின்றனர், ஆனால் அதில் முறையான வெளிப்படைத்தன்மை இல்லை. பெண் நாய்களுக்குக் கருத்தடை செய்ய ஒரு மணி நேரம் ஆகும் என்பதால் அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். அதே நேரத்தில் ஆண் நாய்களுக்கு 10 நிமிடங்களில் முடிந்துவிடும் என்பதால ஆண் நாய்கள் அதிகளவில் கருத்தடை செய்யப்படுகிறது. இதனால் தெருநாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. எனவே, பெண் நாய்களையும் பிடித்துக் கருத்தடை செய்ய வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் தெருவிளக்குகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை.

கவுன்சிலர்களின் புகார்களுக்குப் பதிலளித்து (பொ)மேயர் மேரி பிரின்சிலதா கூறியதாவது: "குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்துத் தற்காலிக மற்றும் நிரந்தர நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பல்வேறு இடங்களில் பிரதான பைப்லைன்களில் உடைப்பு ஏற்பட்டு நீர்க்கசிவு உண்டாகிறது. அந்த உடைப்புகளைச் சரிசெய்தாலே குடிநீர்ப் தட்டுப்பாடு பெருமளவு நீங்கிவிடும். இதனை உடனடியாகச் சரிசெய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காண்பது தொடர்பாகப் போக்குவரத்துப் போலீசாருடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. விபத்துகள் நடக்கும் பகுதிகளில் சிக்னல்கள் அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. நாய்கள் கருத்தடை விவகாரத்தில் கவுன்சிலர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, பெண் நாய்களுக்கும் முறையாகக் கருத்தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நகரில் சுற்றித் திரியும் நாய்களைப் பிடிக்கத் தனி வாகனங்கள் பயன்படுத்தப்படும்.

செம்மண்குளம் தூர்வாரும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அங்கிருந்து எடுக்கப்படும் மணலை கனிமவளத் துறையின் முறையான அனுமதி பெற்ற பின்னரே வெளியே கொண்டு செல்ல முடியும். அதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று தெரிவிக்கப்பட்டு மாமன்ற கூட்டம் நிறைவு பெற்றது.

## குப்பை கொட்டும் எம்.எல்.ஏ. யோசனைக்கு வானதி சீனிவாசன் கண்டனம்



திருச்சி, மே. 28

திருச்சி திருவெறும்பூர் எம்எல்ஏ நவல்பட்டு விஜி, திருச்சிஅரியமங்கலம்பகுதியில்குவிந்துள்ளகுப்பைகளை சுமார் 1700 அடி ஆழமுள்ள பாறைப் பள்ளத்தில் கொட்டலாம் என யோசனை வழங்கியுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், தவெக எம்எல்ஏவின் யோசனை இயற்கைவளத்தைபாழாக்கும்வகையில்அமைந்துள்ளது. இதனால், நிலத்தடி நீர்வளம், மண்வளம், இயற்கை நீரோட்டம்கடுமையாகபாதிக்கப்படும்.தூய்மை இந்தியா திட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிணற்றுகளில் தவறி விழுந்த மாடுகள் மயிலை தீயணைப்புத் துறையினர் மீட்டனர்

தருமபுரி மே 28

தருமபுரி மாவட்டம் கடத்தூர் அடுத்த தேக்கல் நாய்க்கன்பட்டியை சேர்ந்தவர் ஈஸ்வரன் விவசாயி இவர் தனது தோட்டத்தில் மாடு மற்றும் கன்றுகளை மேய்ச்சலுக்காக கட்டியிருந்தார். அப்போது அங்குள்ள கிணற்றில் மாடு ஒன்று தவறி விழுந்தது. இது குறித்து பாப்பிரெட்டிப்பட்டி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பெயரில் தீயணைப்பு நிலைய அலுவலர் பிரகாசம் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து கிணற்றிலிருந்து மாட்டை உயிருடன் மீட்டனர். இதே போல் புளியம்பட்டியில் சக்தி என்பவரின் கிணற்றில் விழுந்த மாட்டை தீயணைப்பு படையினர் மீட்டனர். இது போன்று மணியம்பாடி கிராமத்தில் அதியமான் என்பவரின் கிணற்றில் மயில் தவறி விழுந்தது. தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மயிலை மீட்டு வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.



## முன்னாள் நகர மன்ற தலைவர் எஸ்பி மணி நேரில் வாழ்த்து

திருப்பூர், மே 28

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா பார்க் சாலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை துவக்கி வைத்தார் இந்த விழாவில் முன்னாள் 15 வேலம்பாளையம் நகர மன்ற தலைவர் எஸ் பி மணி கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினருக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார் இந்த நிகழ்வில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள்: கலெக்டர் ஆய்வு

தருமபுரி, மே. 28



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர்சதீஷ்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் . பி. பள்ளிப்பட்டி ஊராட்சியில் வாசி கவுண்டனூர் முதல் கும்பராஅள்ளி வரை செல்லும் நீரோடையின் குறுக்கே ரூ.2.53 லட்சம் மதிப்பீட்டில் கேபியன் தடுப்பணை கட்டப்பட்டு வரும் பணி மற்றும் பையர்நத்தம் ஊராட்சி ஏரியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.1.48 லட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்பட்டு வரும் பணிகளை ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். மேலும் வெங்கட சமுத்திரம் ஊராட்சி கோழி மங்களூரில் ரூ.8.40 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் நாற்றுப்பண்ணை கூடத்தில் 10 ஆயிரம் நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு வருவதை ஆய்வு செய்தார் . பட்டு கோணம்பட்டியில் உள்ள ஏரி பூரணஅமைக்கப்பட்டுவருவதைஆய்வு செய்தார். இந்த வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென்று அலுவலர்களுக்கு அறிவுருத்தனார்.

இந்த ஆய்வின்போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், ஆசாத், உதவி திட்ட அலுவலர் அருண்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, உமா, ரங்கநாதன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.



## ரேஷன் கடைகளில் பொருட்களை எடை குறையாமல் வழங்க வேண்டும்

### விற்பனையாளர்களுக்கு ஆட்சியர் சதீஷ் அறிவுறுத்தல்

தருமபுரி மே 28

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பொ. துரிஞ்சிப்பட்டியில் ரேஷன் கடையில் ஆய்வு செய்த ஆட்சியர் அத்தியாவசிய பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு உள்ளிட்ட பொருட்களை பரிசோதித்து அதன் தரம் குறித்து விற்பனையாளரிடம் கேட்டறிந்தார் . மேலும் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த மின்னணு தராசுகள் மற்றும் விற்பனை முனைப கருவிகளை ஆய்வு மேற்கொண்டார். அரிசி உள்ளிட்ட அதியவாசிய பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா என்று குடும்ப அட்டைதாரர்களிடம் கேட்டறிந்தார்.

அப்போது ரேஷன் கடைகளில் பொருட்களை எடை குறையாமல் வழங்க வேண்டுமென்று விற்பனையாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், ஆசாத், உதவி திட்ட அலுவலர் அருண்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, உமா ,ரங்கநாதன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவது குறித்து அனைத்து தலைமையாசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .மதன்குமார்,துணைஆட்சியர்(பயிற்சி)செல்வி.சௌமியா,மாவட்டகல்விஅலுவலர்கள் .கௌசர், .கிருஷ்ணன், உதவி திட்ட அலுவலர் .மகேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வி) .சர்தார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தேனி, மே. 28

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (27.05.2026) நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் மற்றும் மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இந்த கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்களின் வாழ்வாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ உதவி, உதவித்தொகை, வீட்டுவசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகத்திடம் முன்வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் சுயமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்யும் வகையில், இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த உதவித் திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகள் வேலை, கல்வி மற்றும் அன்றாட தேவைகளுக்காக எளிதில் சென்று வர முடியும் என்பதால், பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதாகவும், பொதுமக்கள் அரசின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



### மணக்குடியில்

## இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 6 மீனவர் குடும்பங்களை விஜய்வசந்த் எம்பி சந்திப்பு

நாகர்கோவில் , மே 28

மணக்குடியைச் சேர்ந்த மீனவர்கள் ஆல்பர்ட், அந்தோணிராஜன், அலோசியஸ் உட்பட 6 பேர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவித்து தாயகம் அழைத்துவர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடும்பத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்பி, 6 மீனவர் வீடுகளுக்கு சென்று நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்து ஆறுதல் கூறினார். மேலும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசு, இலங்கை அதிகாரிகளுடன் தூதரக ரீதியாகப் பேச்சுவார்த்தை நடத்தி மணக்குடி மீனவர்களை உடனடியாக மீட்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். மேலும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூலம் பிணைய தொகை இல்லாமல் அவர்களை விடுதலை செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும், கூடிய விரைவில் அவர்கள் தாயகம் திரும்புவார்கள், தூண்டில் பயன்படுத்தி மீன்பிடிக்கும் நாட்டு படகுகளை மீட்க முயற்சி செய்வதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வின் போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் அரோக்கியராஜன், மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன், கடலோர அமைதி வளர்ச்சி குழும இயக்குநர் பங்கு பணியாளர் பபியான்ஸ், ஒருங்கிணைப்பாளர் ஆஸ்டின், மணக்குடி பங்கு பணியாளர் லாரன்ஸ், மனித உரிமை துறை மாநில செயலாளர் விமல்ராஜ், மனித உரிமை துறை கிழக்கு மாவட்ட தலைவர் எட்வின், மாவட்ட துணைத் தலைவர் செல்வின் ஊர் தலைவர் இருதயதாசன், பொருளாளர் மரிய அன்டனி மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் காஸ்டன், மிக்கேல் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருச்சி

## விபத்தில் உருக்குலைந்த சுற்றுலா வேன்



திருச்சி, மே. 28

திருச்சி புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (மே 26) நள்ளிரவு கீரனூரில் இருந்து திருச்சி நோக்கி வந்த சுற்றுலா வேன், குண்டூர் அருகே ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலை தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வேனின் முன்புறம் கடுமையாக சேதமடைந்தது. படுகாயமடைந்த ஓட்டுநர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதுகுறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## மணப்பாறை அமைச்சர் கீர்த்தனா ஆய்வு

### தவெக தொண்டர்களால் பரபரப்பு



திருச்சி, மே. 28

திருச்சி மாவட்டம் மணப்பாறை சிப்காட்டில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் கீர்த்தனா ஆய்வு செய்ய வந்தபோது, தவெக தொண்டர்கள் ஏராளமானோர் குவிந்து செல்ஃபி எடுக்கத் தொடங்கினர். இது கட்சி நிகழ்ச்சி அல்ல, அரசு நிகழ்ச்சி என அதிகாரிகள் அறிவுறுத்தியும் தொண்டர்கள் புகுந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தவெக தொண்டர்களால் அரசு நிகழ்ச்சி கட்சி நிகழ்ச்சியாக மாறியது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### மணப்பாறையில்

## மூன்று கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை



திருச்சி, மே. 28

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் புகழ்பெற்ற கால்நடை சந்தையில் பக்ரீத் பண்டிகையையொட்டி ஆடுகள் விற்பனை அமோகமாக நடைபெற்றது. கிராம திருவிழாக்களும் நடைபெற்று வருவதால் ஆயிரக்கணக்கானோர் ஆடுகளை வாங்க குவிந்தனர். ஆடுகளின் வரத்து குறைவாக இருந்ததால், விலை உயர்ந்தது. வியாபாரிகள் தரப்பில், மொத்தமாக சுமார் 3 கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை ஆனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆடுகளின் விலை 50 ஆயிரத்தை நெருங்கியது.

### திருச்சி

## கொலை குற்றவாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை



திருச்சி, மே. 28

திருச்சி மாவட்டம் சிறுகனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பெரகம்பி பகுதியில் தூங்கிக் கொண்டிருந்த நபரை கொலை செய்துவிட்டு, வீட்டில் இருந்த நகை மற்றும் பணத்தை திருடிச் சென்றகிஷாந்த்என்றவாலிபருக்கு,திருச்சிகுற்றவியல் நீதிமன்றம் இரட்டை ஆயுள் தண்டனையும், 15,000 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.




தூத்துக்குடி மாநகராட்சியின் சாதாரண மாமன்ற கூட்டம் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டம் பல்வேறு அரசியல் நகர்வுகளுடனும், பரபரப்புகளுடனும் அரங்கேறியது. மாநகராட்சி மேயர் ஜெகன்பெரியசாமிதலைமையில்நடைபெற்றஇந்தகூட்டத்தில்,மாநகராட்சிஆணையர் பிரியங்கா மற்றும் துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் வார்டு கவுன்சிலர்களும் க லந்து கொண்டனர்.அதிமுக காங்கிரஸ் கட்சி சேர்ந்த சிலர் கவுன்சிலர்கள் கூ ட்டரங்கு வரவில்லை. என்றாலும கவுன்சிலர்களின் காரசாரமான விவாதங்களுக்கு இடையே, மாநகராட்சியின் பல்வேறு வார்டு மேம்பாட்டு பணிகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த 48 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



### குமரி மாவட்டத்தில்

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு நெல் மணிகளோடு வந்த விவசாயிகள் ஆய்வு செய்த அதிகாரிகள்

நாகர்கோவில், மே.28

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அழகு மீனா தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் விளைவித்த நெல்லை கொள்முதல் செய்யாமல் நெல்மணிகளை கொள்முதல் செய்யும் நுகர்வோர் வாணிப கழக அதிகாரிகள் லஞ்சம் வாங்கி வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

தமிழக அரசு நெல் கொள்முதல் செய்யும்போது மூடைக்கு இவ்வளவு பணம் என்று லஞ்சம் வாங்கக்கூடாது என்று உத்தரவு போட்டு இருந்தது. ஆனால் நெல் கொள்முதல் செய்ய நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் இடையூறால் சுமார் இரண்டு மாதங்களுக்கு மேல் கொள்முதல் செய்யாமல் நெல்மணிகள் மழை நனைந்து அழிந்து வருகிறது.

இதனால் மே மாத விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று 27ம் தேதி நடந்த நிலையில் டிராக்டர்களில் நெல்மணிகளை கொண்டு வந்த விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த நெல்லை கொள்முதல் செய்யவில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்தனர்.

அது தொடர்பாக மாவட்ட குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்ட நுகர் பொருள் வாணிப கழக அதிகாரி தவறான தகவலை தெரிவித்து இருந்தார். உடனே பாசன துறை சேர்மன் வின்ஸ் ஆன்றோ மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் தாணு பிள்ளை உட்பட பலர் மேற்படி அதிகாரி தவறான தகவலை தெரிவித்ததாக கூறி ஆட்சேபனை தெரிவித்தனர்.

உடனே மாவட்ட ஆட்சியர் மேற்படி வாகனத்தில் இருந்த நெல் மணிகளை கோட்டாட்சிய தலைமையில் ஆய்வு செய்ய கூறியபடி ஆய்வு செய்தனர். மேலும் மாலை 3 மணி அளவில் சம்மந்தப்பட்ட பகுதியில் கொட்டப்பட்டு இருக்கும் நெல்மணிகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். இதனால் விவசாயிகள் அப்போது சமரசம் ஆகி சென்ற நிலையில் நெல் கொள்முதல் செய்யவில்லை என்றால் தங்களது போராட்டம் தொடரும் என்று கூறி கலைந்து சென்றனர்.

பின்னர் கலெக்டர் அறிவித்தபடி சென்பராமன்புதூர் பகுதியில் உள்ள நெல் குடோனிலலுள்ள நெல்லை நாகர்கோவில் கோட்டாட்சியர் காளீஸ்வரி ஆய்வு செய்தார்.

உடன் நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் சிவகுமார், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் கீதா, மாவட்ட நீர்ப்பாசன சேர்மன் வின்ஸ் ஆன்றோ, மீன்வளத்துறை முன்னாள் சேர்மன் சகாயம், பாசனத்துறை மாவட்ட குழு உறுப்பினர்கள் தாணு பிள்ளை, முருகேசபிள்ளை , அருள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் தெற்கு தொகுதி எம்எல்ஏ அலுவலகம் திறப்பு அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

### சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் உறுதி



திருப்பூர், மே 28

திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா நடைபெற்றது. புதிய அலுவலகத்தை சட்டமன்ற உறுப்பினர் எஸ். பாலமுருகன் திறந்து வைத்தார்.

விழா காலை 6 மணியளவில் கணபதி ஹோமத்துடன் தொடங்கியது. தொடர்ந்து காலை 10 மணியளவில் புதிய அலுவலகத்தை எஸ்.பாலமுருகன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

“திருப்பூரில் குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்றுவேன். நொய்யல் ஆற்றின் குறுக்கே யூனியன் ரோடு ஈஸ்வரன் கோவில் சந்திப்பு பகுதியில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளை ஆய்வு செய்து, அவற்றை விரைந்து முடிக்க அதிகாரிகளிடம்அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் பழைய பேருந்து நிலையம், அம்மா உணவகம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பகுதிகளில் நிலவும்சுகாதாரமற்றும்தூய்மைபிரச்சினைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டுள்ளேன்.

நேரில் குறைகளை தெரிவிக்கலாம் திருப்பூர் மாநகரில் ஓராண்டுக்கும் மேலாக நிலவி வரும் குப்பை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சரை சந்தித்து நடவடிக்கை எடுக்கப்படும். மாநகரை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க மேற்கொள்ளப்படும். முயற்சிகள்மா நகராட்சியில் பதிவு பெற்றநடைபாதைகடைவியாபாரிகளுக்கு மேற்கூரை நடவடிக்கை மார்க்கெட்டில் அமைத்து வழங்க எடுக்கப்படும். பூ தினசரி வாடகை தொடர்பான பிரச்சினைகள் குறித்து தகவல் கிடைத்துள்ளது. இதுகுறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும். அரசுப் பள்ளிகளில் புதிய மாணவர் சேர்க்கை மற்றும் மாற்றுச் சான்றிதழ் வழங்குவதற்காக பணம் வசூலிப்பது தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நேரில் சந்தித்து குறைகளை தெரிவிக்கலாம். மேலும் எனது உதவியாளரிடமும் மனுக்கள் அளிக்கலாம்" என்றார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர்கள் பாண்டியன், பாபு, குத்புதீன், மோகன், அமர்நாத், ஜே.கே. சாமி, செல்லப்பாண்டி, போஸ், ரஞ்சித், கௌதம், சந்துரு, யுவராஜ், சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# த.வெ.க. சட்டமன்ற அலுவலகம் திறப்பு விழா

திருப்பூர்:மே28

திருப்பூர் தெற்கு சட்டமன்ற அலுவலக திறப்பு விழாவில் பல் சமய நட்புறவுக் கழகத்தின் சார்பாக மாவட்ட தலைவர் ஷாஜஹான் தலைமையில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். திருப்பூர்மாநகர்மாவட்டத்துணைச் செயலாளர் சகோதரர் குத்புதீன் அவர்களும் பல்சமய நட்புறவுக் கழகத்தின் மாவட்ட பொருளாளர் செல்வகுமார் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்டத்துணைத்தலைவர்நூர்முஹம்மத்மாவட்ட இளைஞரணி செயலாளர் சுரேஷ் மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் தங்கராஜ் பல்லடம் ஒன்றிய தலைவர் முகமது அலி இளைஞர் அணியை சேர்ந்த பிரம்மா மாணவர் அணி சேர்ந்த பைசல் தவெக 50 வது வார்டு பொறுப்பாளர் கலில் ஆகியோர் உடன் இருந்தனர்.




## சென்னையில்

# கிராண்டீஸ் இன்ஸ்டியூட் கைபேசி, மடிகணிணி தெழில்நுட்ப பயிலகம் புதிய கிளை திறப்பு விழா

சென்னை, மே 28,

கைபேசி, மடிகணிணி தொழில் நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு மற்றும் வணிக வாய்ப்புகள் பெறும் வகையில் 2 வருட கால பயிற்சி தரும் கிராண்டீஸ் இன்ஸ்டியூட் நிறுவனத்தின் சென்னை எழும்பூரில் கிளை திறப்பு விழா நடைபெற்றது.

இத்திறப்பு விழா நிகழ்ச்சியில் திருவிக நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.பல்லவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார் .

மேலும் இந்நிகழ்ச்சியில் கல்வி ஆலோசகர் லட்சுமிநாராயணன், டிஜிட்டல் கிரியேட்டர் கமலி குணசேகரன், வெதர்மேன் வேல்க் அபிஷேக் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தொழில் வழி காட்டுதல் நிகழ்ச்சி மற்றும் இன்றைய காலகட்டத்தில் அதிக வருமானம் தரக்கூடிய கைபேசி, மடிகணிணி தொழில்நுட்பத் துறையில் வேலை வாய்ப்பு மற்றும் வணிக வாய்ப்புகள் குறித்து தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும் பயிற்சிப்பட்டறை மற்றும் இலவச செய்முறை பயிற்சி பயிலரங்கம் மூலம் மாணவர்கள் நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொண்டு கற்றுக்கொள்ளும் அனுபவத்தை பெற்றனர்.

இதுகுறித்து கிராண்டீஸ் இன்ஸ்டியூட் நிறுவன தலைமை நிர்வாகி ஷாஹித், சென்னை கிளை மேலாளர் பரத் ஆகியோர் தெரிவித்ததாவது:கிராண்டீஸ் இன்ஸ்டியூட்டில் மாணவர்கள் படிக்கும் காலத்திலேயே ₹70,000 முதல் ₹1,20,000 வரை சம்பாதிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், கோர்ஸ் முடித்த பிறகு ₹20,000 முதல் ₹50,000 வரை மாத சம்பளத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

மேலும் வெளியூர் மாணவர்களுக்கு சமைக்கும் வசதிகளுடன் கூடிய இலவச தங்கும் விடுதி வசதிகளும் செய்து தரப் படும்என்று தெரிவித்தனர்.



# நுள்ளிவிளை ரெயில்வே பாலப்பணி தாமதம் 500 கிராம மக்கள் அவதி; பொதுமக்கள் புகார்

நாகர்கோவில், மே.28

நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் தோட்டியோடு பகுதியில் இருந்து திங்கள் நகர் செல்லும் சாலை பிரதான சாலையாக திகழ்கிறது. இச்சாலைவழியாகவே திங்கள்நகர், இரணியல், தேங்காப்பட்டணம், கருங்கல், குளச்சல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகள் சென்று வருகின்றன. தினமும் ஆயிரகணக்கான வாகனங்கள் இச்சாலை மார்க்கமாக தினமும் சென்று வருகின்றன.

இச்சாலையில் நுள்ளி விளை பகுதியில் குறுக்கிடும் இருப்புப்பாதையில் இரட்டை ரெயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் இங்கு ஏற்கனவே இருந்த குறுகிய பாலத்தை அகற்றி அதனை விரிவுபடுத்திடும் வகையில் புதிய பால கட்டுமானப்பணிக்கென இங்கிருந்த பாலம் இடிக்கப்பட்டது. இப்பால வேலைகள் நடைபெறுவதை ஒட்டி இச்சாலை வழியாக சென்றுவந்த பேருந்துகள் மற்றும் வாகனங்கள் இங்கு மாற்றுப் பாதை அமைக்கப்படாததால் மாற்று வழித்தடத்தில் திருப்பிவிடப்பட்டு உள்ளது. தோட்டியோடு பகுதியில் இருந்து பரசேரி, நான் குவழிச்சாலை, பேயன் குழி, கண்டன் விளை வழியாக வ வாகனங்கள் திருப்பி விடப்பட்டு உள்ளது

குறிப்பிட்ட பாலப்பணி தொடங்கி 6 மாத காலங்கள் ஆகிறது பணிகள் 8 மாதத்தில் முடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட ரெயில்வே மேம்பாலப் பணிகள் முழுவீச்சில் இல்லாமல் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்ட இடத்தில் இருந்த பழைய பாலத்தின் தூண்களே இன்னும் அகற்றாத நிலையே உள்ளது. ஆமை வேகத்தில் நகரும் இப்பணிகளால் இச்சுற்று வட்டார பகுதி கிராம மக்கள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். பள்ளி திறக்கப்பட உள்ள நிலையில் மாணவ, மாணவிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு கல்வி நிலையங்களுக்கு செல்ல இயலாததுடன் சிரமங்களை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர். வாகனங்கள் சுற்றி செல்வதால் எரிபொ ருள் இழப்பு, காலதாமதம், வாகன பகுதிகள் தேய்வு உள்ளிட்டவற்றிற்கும் காரணமாகிறது. எனவே முடங்கி உள்ள நுள்ளி விளை ரெயில்வே பாலப்பணிகளை விரைந்து செயல்படுத்தி மக்கள் பாதிப்புகள் தொடர்வதை தடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் சமூக பொது நல இயக்கம் மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்து உள்ளது.

## தேனி மாவட்டம்

# திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்



தேனி, மே. 28

தேனி மாவட்டம், திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் (27.05.2026) நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இம்முகாமில் பல்வேறு முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு, தங்களுக்குத் தேவையான பணியிடங்களுக்கு தகுதியான

இளைஞர்களை நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்தன. மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் கலந்து கொண்டு, தேர்வான இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மேலும், இன்றைய காலகட்டத்தில் கல்வியுடன்திறன் மேம்பாடும் மிகவும் அவசியம் என்றும், இளைஞர்கள் தனியார் துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகளை திறம்பட பயன்படுத்திக் கொண்டு தங்களின்வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமின் மூலம் தேனி மாவட்டம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பயன்பெற்றனர். பல துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் கலந்து கொண்டதால், பட்டதாரிகள், டிப்ளமோ மற்றும் பள்ளிக்கல்வி முடித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு உருவானது. மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் இளைஞர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புதுக்கடையில்


# டாஸ்மாக் கடையை மூட கேட்டு தே.மு.தி.க. சார்பில் ஆர்ப்பாட்டம்



புதுக்கடை, மே.28

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக வருவாய் கிடைக்கும் டாஸ்மார்க் கடையாக புதுக்கடை டாஸ்மாக் கடை உள்ளது. இந்த கடையானது கிறிஸ்தவ ஆலயத்திற்கும், பஸ் ஸ்டாண்டிற்கும் அருகில் பொதுமக்களுக்கு இடையூறாக அமைந்துள்ளது. ஆகவே இந்தகடையை அப்புறப்படுத்த வேண்டும் என நீண்ட நாட்களாக பொதுமக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். அண்மையில் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் ஆலயங்களுக்கு அருகிலும் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கக்கூடிய டாஸ்மார்க் கடை அப்புறப்படுத்தப்படும் என கூறியதை தொடர்ந்து இந்த கடையை அப்புறப்படுத்த வேண்டும் என கோரிக்கை வலுத்தது.

தொடர்ந்து இந்த கடையை அப்புறப் படுத்த கேட்டு தேமுதிக சார்பில் கடை முன்பு மாவட்ட பொருளாளர் செல்லத் துரை தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. புதுக்கடை பேரூர் செயலாளர் சுனோபர், மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் பிறைட் செல்வின் ராஜ், முஞ்சிறை கிழக்கு ஒன்றிய செயலாளர் டாலி , மாவட்ட மருத்துவ அணி செயலாளர் கவாஸ்கர், முஞ்சிறை செயலாளர் தினேஷ், மாவட்டச் செயலாளர் ஐடன் சோனி உட்பட பலர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் டாஸ்மாக் மேலாளர் சரவணன் புதுக்கடை இன்ஸ்பெக்டர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி இந்த கடை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி கூறியதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப் பட்டது.



## களியக்காவிளை அருகே

# செங்கல் சிவ பார்வதி கோவிலில் ஏழை மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்

களியக்காவிளை, மே 28

களியக்காவிளை அருகே செங்கல், மகேஸ்வரத்தில் சிவபார்வதி கோயில் உள்ளது. இந்த கோயிலில் உலகிலேயே மிகப்பெரிய சிவலிங்கம், தேவபோகம், வைகுண்டம், கணபதி மண்டபம், உள்ளிட்ட தேவ சன்னதிகள் அமைக்கப்பட்டுள்ளது. கோயில்சார்பில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்கு வருடந்தேறும் நோட்டு புக், குடை, எழுது பொருட்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள்வழங்கப்பட்டுவருகிறது. இந்த வருடம் புகழ்பெற்ற செங்கல் சிவபார்வதி கோயிலில் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

கோயில் மடாதிபதி சுவாமி மகேஸ்வரானந்த சரஸ்வதி நோட்டு புத்தகங்கள், பேனா, புத்தகப் பை, குடை உள்ளிட்டவற்றைவழங்கி ஆசிகூறினார். அப்போது அவர், நல்ல முறையில் கல்வி கற்குமாறு மாணவர்களை அறிவுறுத்தினார். இந்த நிகழ்ச்சியில் கோயில் மேல்சாந்தி குமார், வக்கீல் ஜெயசந்திரன் மற்றும் நிர்வாகிகள் பெற்றோர்கள், மாணவ மாணவிகள், ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மண்ணச்சநல்லூரில்

# மனநலம் பாதிக்கப்பட்ட கூலிதொழிலாளி தற்கொலை

திருச்சி, மே. 28

திருச்சிமாவட்டம்மண்ணச்சநல்லூர்கீழஅக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட முருகானந்தம், கடந்த 24ஆம் தேதி வீட்டில் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். போலீசார் அவரது உடலை பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.



## திருச்சி

# காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் மீது திமுக புகார்

திருச்சி, மே. 28

திருச்சிதெற்குமாவட்டதிமுகதகவல்தொழில்நுட்ப பிரிவு துணை அமைப்பாளர் வழக்கறிஞர் முரளி கிருஷ்ணன் தலைமையிலான நிர்வாகிகள், திருச்சி மாவட்ட எஸ்பி அலுவலகத்தில் இன்று புகார் மனு அளித்தனர். திமுக மற்றும் அதன் தலைவர்கள் மீது தொடர்ந்து அவதூறு கருத்துக்களை பரப்பி வரும் காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் மீது உடனடி நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனஅவர்கள்மனுவில் தெரிவித்துள்ளனர்.

## நாகர்கோவிலுக்கு வந்த

# விவேக் எக்ஸ்பிரஸ் ரயிலில் 10 கிலோ கஞ்சா சிக்கியது; ரயில்வே போலீஸ் விசாரணை




நாகர்கோவில், மே. 28

குமரிமாவட்டத்திற்குவடமாநிலங்களில்இருந்து வரும் ரயில்கள் மூலமாக பெருமளவில் கஞ்சா கடத்தப்படுவதாக ரயில்வே போலீசருக்கு ரகசிய தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. இதன் பேரில் நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரிக்கு வரும் ரயில்களில் போலீசார் தினமும் தீவிர சோதனை நடத்தி வருகிறார்கள்.

இந்தநிலையில்அசாம்மாநிலம்திப்ருகாரிலிருந்து கன்னியாகுமரிக்கு வந்த விவேக் எக்ஸ்பிரஸ் ரயில் வழக்கமாக நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் வரவேண்டும். ஆனால் இந்த ரயில் பல மணி நேரம் தாமதமாக, நேற்று காலை 5 மணி அளவில் நாகர்கோவில் ரயில் நிலையம் வந்தடைந்தது.

பின்னர் நாகர்கோவில் இருந்து அந்த ரயில் கன்னியாகுமரி நோக்கி புறப்பட்டு சென்றது. அப்போது ரயிலில், ரயில்வே போலீசார் மற்றும் போதை பொருள் தடுப்பு போலீசார் இணைந்து அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ரயிலின் முன்பதிவு செய்யப்படாத பெட்டி ஒன்றில் போலீசார் சோதனை நடத்திய போது, அங்குள்ள ஒரு இருக்கையின் கீழே கேட்பாரற்ற நிலையில் ஒரு பை அனாதையாக கிடந்தது .

அங்கிருந்த பயணிகளிடம் விசாரித்த போது அந்த பைக்கு யாரும் உரிமை கோரவில்லை. சந்தேகமடைந்த போலீசார் அந்த பையை திறந்து பார்த்தபோது, அதற்குள் 10 பார்சல்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றை க சோதனை செய்தபோது அவை அனைத்தும் கஞ்சா பார்சல் என்பது உறுதி செய்யப்பட்டது. தலா ஒரு கிலோ எடை கொண்ட 10 கஞ்சா பாக்கெட்டுகள் அதில் இருந்தது. போலீசார் உடனடியாக நாகர்கோவில் ரயில்வே போலீஸ் நிலையத்திற்கு பார்சல்களை கொண்டு சென்றனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா மூடைகளை மேல் விசாரணைக்காக போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

கஞ்சாவை கடத்தி வந்த வட மாநிலத்தை சேர்ந்த நபர் ரயில் தாமதமானதால் போலீசாரிடம் மாட்டிக் கொள்ளாமல் இருக்க பையை விட்டு, தப்பி ஓடி இருக்கலாம் என போலீசார் சந்தேகப்படுகின்றனர். மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர். வட மாநிலங்களில் இருந்து வரும் ரயில்களில் இதுபோன்று அடிக்கடி கஞ்சாகடத்தல்சம்பவங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத் தகுந்ததாகும்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் வடக்கு ஒன்றிய செயலாளர் மூன்றாம் பட்டி எஸ் குமரேசன். 50.ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மாநில மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் உடனிருந்து இனிப்பு வழங்கி கொண்டாடினார்

## கடலாடியில்

# நுண்ணுயிர் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி




முதுகுளத்தூர், மே.28

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கடுகுசந்தை கிராமத்தில் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள்பயிற்சி பயறு வகை பயிர்களில் நுண்ணுயிர் பாசனம் என்னும் தலைப்பில் நடைபெற்றது

இப்பயிற்சிக்கு திரு.M.K.அமர்லால் வேளாண்மைதுனை இயக்குநர்(மாநில திட்டம்) அவர்கள் தலைமையேற்று தொழில்நுட்ப உரையாற்றுகையில் நுண்ணுயிர் பாசனம் அமைப்பதற்கு தேவையான ஆவணங்கள் மேலும் நீர் ஆதாரங்களான ஆழ்துளை கிணறு, பண்ணைக்குட்டை உள்ள சிறுகுறு விவசாயிகள் 100% மானியத்திலும் மற்ற விவசாயிகள் 75% மானியத்திலும் நுண்ணுயிர் பாசனக் கருவிகள் பெற்றுக்கொள்ளலாம் மேலும் பயறுவகைப் பயிர்களில் 40 60% வரை தண்ணீர் சேமிப்பு,களை வளர்ச்சி குறைவு,உரங்களை நேரடியாக வழங்கலாம், மண் ஈரப்பதம் பாதுகாக்கப்படும், வறட்சி பாதிப்பு குறையும் போன்ற தகவல்களை எடுத்துக் கூறினார் சீதாலட்சுமி வேளாண்மை அலுவலர் உழவர் பயிற்சி நிலையம் பரமக்குடி உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம்,பாஸ்போபாக்டிரியா,ரைசோபியம் ஆகியவற்றின் நன்மைகள் அதனைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி எடுத்துக் கூறினார் திரு தவமுருகன் உதவி வேளாண்மை அலுவலர் தொழில்நுட்ப உரையாற்றுகையில் விவசாய அடையாள எண் பதிவேற்றம் பற்றி எடுத்துக் கூறினார்

தீபன் உதவி வேளாண்மை அலுவலர் அவர்கள் பிரதம மந்திரி கௌரவ நிதி திட்டத்தை பற்றி விரிவாக கூறினார். திரு.முத்துக்குமரவேல் வட்டார தொழில்நுட்ப உரையாற்றுகையில் அனைத்து திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார் கோகுல் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) கலந்து கொண்டார்




# பாரதீய ஜனதா ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காக தவெகவுக்கு ஆதரவு

## காங்கிரஸ் அகில இந்திய செயலாளர் செல்லக்குமார் பேட்டி

ஈரோடு மே 28

அகில இந்திய காங்கிரஸ் கட்சி செயலாளரும் முன்னாள் எம்பியுமான செல்லக்குமார் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி மறைமுகமாகவோ பின் வாசல் வழியாகவோ ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விடக்கூடாது என்பதற்காக தமிழக வெற்றிக் கழகத்திற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு அளித்துள்ளது. தமிழக காங்கிரஸ் எப்போதும் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும். காவிரியில் மேகதாதுவில் அணை கட்டுவதற்கு தமிழக காங்கிரஸ் கட்சி எப்போதும் அனுமதிக்காது. எதிர்கட்சி தலைவர் மு. க.ஸ்டாலின் காங்கிரஸ் கட்சி எப்போதும் முதுகில் குத்துவது என்பது போன்ற தோற்றத்தை கட்டமைக்க முயற்சி செய்கிறார் . பாரதிய ஜனதா அரசுக்கு அதிமுக அளித்த ஆதரவை வாபஸ் பெற்றதும் திமுக பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்தது. இது துரோகமாக திமுகவுக்கு தெரியவில்லையா.அதிமுக எம் எல்ஏக்கள் ராஜினாமா செய்வது ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமானது அல்ல. முதலமைச்சர் விஜய் கால அவகாசம் எடுத்து கொண்டு தேர்தல் வாக்குறுதிப்படி பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். கோவையில் 10 வயது சிறுமியின் கொலைக்கு காரணமான வர்களுக்கு கடுமையாக தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பட்டியின்போது மாவட்ட தலைவர்கள் ராஜேஷ், ராஜப்பா,முத்துக்குமார் மண்டல தலைவர்கள் விஜயபாஸ்கர், புனிதன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## களியக்காவிளை பேரூராட்சி

# வீட்டில் வெடிபொருள்கள் பதுக்கிய பாஜக கவுன்சிலர் கைது

களியக்காவிளை, மே.28

களியக்காவிளை அருகே திருத்துவபுரம் பகுதியைச் சேர்ந்தவர் குணசீலன் (52). களியக்காவிளை பேரூராட்சி 14 ஆவது வார்டு கவுன்சிலராக (பாஜக) உள்ளார். இவர் வீட்டருகே பெட்டிக்கடை நடத்தி வருவதுடன் பாறை உடைக்கும் வாகனம் வைத்து தொழில் செய்து வருகிறார். மேலும், கிணறு தோண்டும் பணியும் செய்து வருகிறார்.

இந்த நிலையில் இவரது பெட்டிக்கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் தனிப்படை போலீஸார் அங்கு சென்று சோதனை செய்தனர். தொடர்ந்து குணசீலனின் வீட்டை சோதனை செய்தபோது வீட்டின் பின்புறம் 27 டெட்டனேட்டர்கள், 30 ஜெலட்டின் குச்சிகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இதுகுறித்து களியக்காவிளை போலீஸார் வழக்குப் பதிவு செய்து, குணசீலன் மற்றும் அவருக்கு வெடி பொருள்களை விற்பனை செய்த பனச்சமூடு பகுதியைச் சேர்ந்த ராஜன் (75) ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

## நாகர்கோவிலில்

# ஓட்டல் தொழிலாளி மனைவி மீது தாக்குதல்; 5 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மே. 28

நாகர்கோவில் வடிவீஸ்வரம், அழகம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ராஜேஷ்குமார் (40 ) டூவீலர் ஒர்க் ஷாப்வைத்துள்ளார்.இவர்நண்பர்ராம்ஜிஎன்பவரிடம் இருந்து ராஜேஷ் குமார் தனது குடும்ப தேவைக்காக பணம் வாங்கி இருந்தார். மேலும் தனது மனைவியின் நகைகளை ராம்ஜி மூலம் வங்கியில் அடகு வைத்து விவசாய கடனையும் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் சமீபத்தில் ராஜேஷ் குமார் தனது மனைவியின் நகைகளை மீட்டுத் தருமாறு ராம்ஜி இடம் பணம் கொடுத்துள்ளார். அப்போது ராம்ஜி தனக்கு தரவேண்டிய கடனை முதலில் தர வேண்டும் அதன் பின்னர் தான் தங்க நகைகளை மீட்டு தருவேன் என கூறியுள்ளார். இதனால் இருவருக்கு இடையே தகராறு ஏற்பட்டு வந்தது. இந்த தகராறில் ராம்ஜிக்கு ஆதரவாக அவரது உறவினரான ஓட்டல் தொழிலாளி சிவா (32) என்பவர் பேசியுள்ளார். இதனால் ராஜேஷ்குமாருக்கும் சிவாவுக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தன்று சிவா வீட்டுக்கு சென்று ராஜேஷ்குமார் மற்றும் அவருடன் சென்ற சிலர் சிவாவை சரமாரியாக தாக்கினார்கள். இதை தடுக்க வந்த சிவாவின் மனைவி ரம்யாவை அடித்து கீழே தள்ளி உள்ளனர். இதில் காயம் அடைந்த சிவா, ரம்யா ஆகிய இருவரும் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர். இது குறித்து கோட்டர் போலீசார் வழக்கு பதிவு செய்து ராஜேஷ்குமார் மற்றும் அவரது நண்பர்கள் காசி, சந்தோஷ், விக்கி, முத்து செல்வம் உள்ளிட்ட 5 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

## திருச்சி

# கணவனை கொன்ற மனைவிக்கு ஆயுள் தண்டனை



திருச்சி, மே. 28

திருச்சி மாவட்டம் துறையூரைச் சேர்ந்த அண்ணாதுரை, பத்மினி மற்றும் லலிதா ஆகியோரை ஒரே வீட்டில் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். மது போதையில் அண்ணாதுரை பத்மினியை துன்புறுத்தியதால், ஆத்திரமடைந்த பத்மினி அவரை கொலை செய்தார். இந்த வழக்கில் திருச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், பத்மினிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

## தருமபுரி மாவட்டத்தில்

# கஞ்சா விற்ற மூன்று பேர் கைது

தருமபுரி மே 28

தருமபுரி மாவட்டம் இண்டூர் பகுதியில் காவல்துறையினர் ரோத்து பணியில் ஈடுபட்டனர். அப்போது கஞ்சா பதுக்கி விற்றதாக கோவிந்தசாமி (வயது 39) என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர். இதே போல் பாலக்கோடு அருகே கஞ்சா விற்றதாக தண்டுக்காரஅள்ளி இந்திரா நகரை சேர்ந்த நாகன் (வயது 24), நல்லம்பள்ளி பகுதியைச் சேர்ந்த அஜித் (வயது24)ஆகிய இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.



# புடவைக்காரி அம்மன் கோவிலில் குலதெய்வ வழிபாடு

ஈரோடு மே 28

கோனேரிபட்டியில் உள்ள பிரசித்தி பெற்ற அங்காள பரமேஸ்வரி ஸ்ரீ புடவைக்காரி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் பால் பூஜை விழா முதல் கணபதி ஹோமத்துடன் தொடங்கியது இந்த பால் பூஜை விழாவில் ஊஞ்சப்பாளையம் பங்காளிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர் விழாவில் அங்காள பரமேஸ்வரி, ஸ்ரீ புடவைக்காரி அம்மன் திருவருள் பெற்று வாழ்வில் வளமோடும் நலமோடும் நமது சந்ததிகள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினார்கள்.விழாவை ஒட்டி பதிக்கு மண் கொடுத்தனர் .இதன் தீர்த்த குடம் எடுத்து வந்தனர் பிறகு அம்மனுக்கு கண் திறப்பு நிகழ்ச்சியும் புடவை படைத்தல் நிகழ்ச்சியும் நடைபெற்றது . தொடர்ந்து கோயில் வீட்டிலிருந்து பூஜைக்கூடை எடுத்து பதிக்கு வந்து பெரும் பூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது . பிறகு அன்னதானம் நடைபெற்றது.

## கன்னியாகுமரி பகவதியம்மன் கோயில்

# வைகாசி விசாக திருவிழா கோலாகலம்; இன்று தேரோட்டம் நடக்கிறது



கன்னியாகுமரி, மே. 28

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் விசாக பெருந்திருவிழாவும், புரட்டாசி மாதம் நடைபெறும் நவராத்திரி திருவிழாவும் முக்கியமான திருவிழாக்கள் ஆகும்.

இந்த திருவிழாவில் 10 நாட்களும் பகவதி அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பவனி வருவது வழக்கம். அதே போல இந்த ஆண்டு வைகாசி விசாக பெந்திருவிழா கடந்த 24ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

திருவிழாவின்போது 1 ஆம் திருவிழா அன்று இரவு பூப்பந்தல் வாகனத்திலும், 2 ஆம் திருவிழா அன்று காலையில் பல்லக்கு வாகனத்திலும், இரவு கிளி வாகனத்திலும், 3ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு வேலைகளில் அன்ன வாகனத்திலும்,4ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு வெள்ளி காமதேனு வாகனத்திலும், 5 ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு நேரத்தில் சிம்ம வாகனத்திலும், 6 ஆம் திருவிழா அன்று காலையில் யானை வாகனத்திலும், இரவு இந்திர வாகனத்திலும், 7 ஆம் திருவிழா அன்று காலையில் பல்லக்கிலும், இரவு வெள்ளி இமயகிரி வாகனத்திலும், 8 ஆம் திருவிழா அன்று இரவு பூப்பந்தல் வாகனத்திலும், நள்ளிரவு வெள்ளி குதிரை வாகனத்திலும் வலம் வரும் நிகழ்ச்சி நந்தது.

இதற்காக மொத்தம் 10 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.இதில் குதிரை, இமயகிரி, காமதேனு, கலைமான் ஆகிய 4 வாகனங்கள் வெள்ளி வாகனங்கள் ஆகும். மீதியுள்ள பூப்பந்தல், கிளி, அன்னம், யானை, சிங்கம், இந்திர வாகனம் ஆகிய 6 வாகனங்கள் மர சிற்ப வாகனங்கள் சீரமைக்கப்பட்டது.

9ம் திருவிழாவான இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் திருத்தேர் வடம் தொட்டு இழுத்து தேரோட்டம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. தேர் நிலைக்கு நின்றதும் பகல் 12 மணிக்கு அன்ன தானமும் கஞ்சி தர்மமும் நடக்கிறது.

மாலை 5.30 மணிக்கு மண்டகப்படி நிகழ்ச்சியும் மாலை 6 சமய சொற்பொழிவு 7 மணிக்கு மணிக்கு பக்தி பஜனையும் 9 மணிக்கு வெள்ளி கலைமான் வாகனத்தில் அம்மன் வீதி உலா வருதலும் நடக்கிறது.10 ஆம் திருவிழாவான நாளை (சனிக்கிழமை) காலை 6.15 மணிக்கு மேல் 7 மணிக்குள் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது. காலை 10 மணிக்கு அபிஷேகம் நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் மாலை 5 மணிக்கு மண்டகப்படி நிகழ்ச்சியும் இரவு 8 மணிக்கு நர்த்தன பஜனையும் நடக்கிறது.

9 மணிக்கு தெப்பத்திருவிழா நடக்கிறது. நள்ளிரவு 11 மணிக்கு முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது. திருவிழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்து வருகிறது.

படகு போக்குவரத்து தாமதம்

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் விசாக பெருந்திருவிழா தேரோட்டத்தையொட்டி இன்று பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகு சேவை தாமதமாக தொடங்கும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதன்படி வழக்கமாக காலை 7 மணிக்கு தொடங்கும் படகு சேவை 3 மணி நேரம் தாமதமாக 10 மணிக்கு தொடங்கும். தேரோட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ள வசதியாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக நிர்வாகம் இந்த ஏற்பாட்டை செய்துள்ளனர்

## மேல்மாந்தை கிராமத்தில்

# ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்டு தர வலியுறுத்தி விளாத்திகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு



விளாத்திகுளம் மே 28

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மேல் மாந்தைகிராமத்தில் செயல்பட்டுவரும் தனியார் நிறுவனம் சுமார் 260 ஏக்கர் நிலத்தை போலி ஆவணம் தயார் செய்து பத்திரப்பதிவு செய்துள்ளதாகவும் அதனை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் தமிழக மக்கள் முன்னேற்ற கழக மற்றும் புரட்சி பாரதம் கட்சி சார்பில் மனு வழங்கப்பட்டது. தமிழக மக்கள் முன்னேற்ற கழக வடக்கு மாவட்ட செயலாளர் பாபு, புரட்சி பாரதம் கட்சி வடக்கு மாவட்ட செயலாளர் லெனின் குமார் ஆகியோர் விளாத்திகுளம் பத்திரப்பதிவு அலுவலர் ஆதிலட்சுமியிடம் மனுவை வழங்கினர். இந்நிகழ்வில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் மாரிச்செல்வம் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.